DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Producer)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous — Case No. S.T.C.405/2020

Preliminary Register — P.W. 1

Sessions

Deposition of Witness for — Prosecution / Defence / Court

Name : Raghavan

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.09.2021.

**முதல் விசாரணை -**

நான் தற்போது தொழிலாளர் உதவி ஆணையர் - தோட்டங்கள் நாகர்கோவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.03.2020 அன்று எதிரி திரு. அருண் மேத்யூ என்பவர் வேலை அளிப்பவராக இருந்த வேளிமலை எஸ்டேட் என்ற பதிவு பெற்ற தோட்ட நிறுவனத்தினை அன்று முற்பகல் காலை சுமார் 11.30 மணி அளவில் ஆய்வு செய்தேன். ஆய்வு அறிக்கை படிவம் நகல் அ.சா.ஆ.1 ஆகும். ஆய்வின்போது எதிரி திரு. அருண்

மேத்யூ என்பவர் தோட்ட நிறுவனத்தில் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் 1972 ம் ஆண்டு பணிகொடை சட்டம் மற்றும் 1973 ம் ஆண்டு தமிழ்நாடு பணிகொடை விதிகளின் கீழ் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை ஆய்விற்காக கேட்டேன். அப்போது பிரிவு 7(B)(1)(a & b) உடன் விதி 3(2) ன் கீழ் வேலை அளிப்பவர் விவரத்தில் மாற்றம் ஏற்பட்டபோது அம்மாற்றம் குறித்து படிவம் பி யில் மாற்றம் ஏற்பட்ட 30 நாட்களுக்குள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பியதற்கான ஆதாரத்தை ஆய்வுக்கு கேட்டும் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன முரண்பாட்டிற்காக 17.03.2020 ம் தேதியிட்ட விளக்கம் கேட்கும் அறிவிப்பானது எதிரி வேலை அளிப்பவராக இருந்த வேளிமலை எஸ்டேட் என்ற தோட்ட நிறுவனத்திற்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைத்தேன். விளக்கம் கேட்கும் அறிவிப்பு அ.சா.ஆ.2 ஆகும். 20.03.2020 ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை அ.சா.ஆ.3 ஆகும். விளக்கம் கேட்கும் அறிவிப்புக்கான 23.03.2020 ம் தேதியிட்ட வேலை அளிப்பவரின் பதில் 08.04.2020 எனது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றது. வேலை அளிப்பவர் பதில் அறிவிப்பு அ.சா.ஆ.4 ஆகும். வேலை அளிப்பவரின் பதிலில் திருப்தி இல்லாததால் 17.06.2020 ம் தேதியிட்ட எங்கள் அலுவலக முன்மொழிவு ஆவணம் தொழிலாளர் இணை ஆணையர் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வழக்கு தொடர அனுமதி கோரி முன்மொழிவு ஆவணம் அ.சா.ஆ.5 ஆகும். 21.07.2020 ம் தேதியிட்ட திருநெல்வேலி தொழிலாளர் இணை ஆணையர் அவர்களின் வழக்கு தொடர அனுமதி ஆணை அ.சா.ஆ.6 ஆகும்.

குறுக்கு விசாரணை அனுமதியின் பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.